நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. V. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1751/2026
CNR No.TNTH020027772026

1) பார்த்திபன் (38/2026) (A1),
த/பெ. அய்யநாதன்

2) சிவனேஷ்வரன் (30/2026) (A2),
த/பெ. சிவசாமி

3) செந்தில் குமார் (51/2026) (A3),
த/பெ. சீனிமலை ....மனுதாரர்கள்/எதிரிகள்

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர் அவர்கள்,
தேனி காவல்நிலையம்,
குற்ற எண்.366/2026,
சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 324(4), 303(2), 351(2) BNS

....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள் இம்மனுவை பிரிவு 480 BNSS–ன் கீழ் தேனி காவல் நிலைய குற்ற எண்.366/2026, சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 324(4), 303(2), 351(2) BNS–வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. அதில், இவ்வழக்கில் A1–A3 வரையிலான எதிரிகளை பிணையில் விட்டார் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரிகளுக்கு பல குற்ற வழக்குகள் நிலுவையில்

உள்ளதாலும், எதிரிகளுக்கு ஜாமீன் வழங்கினால் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்காமல் இருப்பார்கள் என்பதாலும், வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகி விடுவார்கள் என்பதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்க மிகக்கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள்/எதிரிகள் சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 324(4), 303(2), 351(2) BNS-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். எதிரிகள் கடந்த 23.06.2026-ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. காயமடைந்தவர் 21.05.2026ம் தேதி தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து கடந்த 26.06.2026ம் தேதி சிகிச்சை முடித்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்பதையும் அறிய முடிகிறது. இவ்வழக்கு விசாரணை நிலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டும், இம்மனுவானது அனுமதித்து பின்வருமாறு கீழ்க்கண்ட நிபந்தனைகள் வழங்கி உத்தரவிடப்டுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) மனுதாரர்கள்/எதிரிகள் தங்களது சார்பாக இரு ஜாமீன்தாரர்களோடு தலா ரூ.10,000/-க்கு பிணைமுறி எழுதித் தரவேண்டும்.

2) மனுதாரர்கள்/எதிரிகள் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி 30 நாட்களுக்கு தொடர்ந்து கையெழுத்திட வேண்டும்.

3) மனுதாரர்கள்/எதிரிகளும், ஜாமீன்தார்களும் தாங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்திவரும் கைபேசி எண்ணை குறிப்பிட வேண்டும்.

4)மனுதாரர்கள்/எதிரிகள் சாட்சிகளையோ, சாட்சியங்களையோ கலைக்கக்கூடாது எனவும்,

5)வழக்கு விசாரணை முடியும் வரை வெளிமாநிலம்/வெளிநாட்டுக்கு செல்லக்கூடாது. மனுதாரர்கள்/எதிரிகளின் பாஸ்போர்ட்டினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

6) பிணைக்காலத்தில் மனுதாரர்கள்/எதிரிகள் இதுபோன்ற எந்த குற்றச்செயலிலும் ஈடுப்படக்கூடாது எனவும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் எனவும், அழைப்பாணையில் பேரில் அழைக்கும்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

BHARATHA DEVI
Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.02 19:33:14 +0530

நீதித்துறை நடுவர்,

தேனி.